பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
ZOOLOGY
அகஞ்சுரக்கும் தொகுதி
Saturday - 11.30 a.m.

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
ZOOLOGY
சிறுநீர்சனனித் தொகுதி
Sat, Sun - 8. 30 a.m.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஹூ ஆவணி ௴ 08 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 10 (24 - 08 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 165

# தமிழர் நலனில் அக்கறை உண்டு என்பதை இந்தியா நிரூபிக்குமா?

## சிங்களக் குடியேற்றங்களை நிறுத்திக்காட்ட வேண்டும்

### கிளிநொச்சிப் பிரசைகள் குழு ஆலோசனை

– அலுவலகச் செய்தியாளர்: எஸ். ராஜ்குமார் –

யாழ்ப்பாணம், ஆக. 24

ஈழத் தமிழர் நலனில் இந்தியாவுக்கு உண்மையாகவே - மானசீகமாகவே - அக்கறை இருந்தால் இந்தியா அதனை நிரூபித்துக் காட்டுமா?

வெலிஓயா உட்பட வடக்கு, கிழக்கில் நடக்கும் சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்த இலங்கை அரசு மூலம் வகை செய்து, அந்த அக்கறையை நிரூபிக்க வேண்டும்.

அவ்வாறு இந்தியா செய்யும் பட்சத்தில் மட்டுமே, தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வாய்ப்புண்டு. அதன் பின்னரே அவர்கள் இந்தியாவுக்கும், போராளிகளுக்கும் இடையே சமரச நிலையை உண்டாக்குவதில் தமது பங்களிப்பைச் செலுத்த முடியும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டப் பிரசைகள் குழுவினர் இந்திய அமைதிப்படையின் தளபதி மேஜர் ஜெனரல் சர்தேஷ்பாண்டே தலைமையிலான அதிகாரிகளிடம் வலியுறுத்திக் கூறினர். கடந்த வாரம் கிளிநொச்சியில் நடந்த சந்திப்பு ஒன்றில் பிரசைகள் குழுவினர் இந்தக் கருத்தை எடுத்துரைத்தனர் என்று குழு வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

சந்திப்பின் போது அமைதிப் படையினரின் சார்பில் அமைதிப்படை தளபதி மேஜர்ஜெனரல் சர்தேஷ்பாண்டே, அமைதிப்படையின் கிளிநொச்சிப் பகுதி கொமாண்டர் பிரிகேடியர் யஷ்பால்சிங் உட்படப் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி பிரமுகர்கள் மற்றும் பிரசைகள் குழு சார்பில் திரு. எஸ். சிவராஜலிங்கம், ஐ நடராசா, ம. சிவபாலன் ஆகியோரும் —

கிளிநொச்சி அரசாங்க அதிபர் கே. தேவசிகாமணி, மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அமிர்தலிங்கம், கிளிநொச்சி உதவிப்பொலீஸ் அதிபர் எஸ். யோகசுமார், பொலீஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி கே. ஜெயக்குமார், கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி கே. சிவ

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பஸ் நிலையத்தில் இளைஞர் சுட்டுக் கொலை

### படையினர் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 24

யாழ். பஸ் நிலையத்தில் நேற்று இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக் காலை சுமார் 7.15 மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

உரும்பராயைச் சேர்ந்த எஸ். சிவநாதன் (வயது 32) என்பவரே இவ்வாறு சுடப்பட்டு மரணமானவராவார்.

மரணமானவர் நேற்றுக் காலை யாழ். பஸ் நிலையத்திற்கு வந்த பொழுதே பஸ் நிலையம் முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் சுடப்பட்டார்.

இதனை அடுத்து அமைதிப்படையினர் யாழ். பஸ் நிலையத்தை உடனடியாகச் சுற்றி வளைத்தனர்.

இதனால் பஸ் நிலையப் பகுதி சில மணி நேரம் வெறிச்சோடியது.

யாழ். ஆஸ்பத்திரியில் சடலம் வைக்கப்பட்டு பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

காலை சுமார் 10 மணி அளவில் மக்கள் பஸ் நிலையத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஒ-10)

## ★ நகரில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 24

நேற்றுக்காலை யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் யாழ் நகரம் சிறிதுநேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து பஸ்நிலையத்தைச் சுற்றிலும் இருந்த கடைகள் அனைத்தும் அவசர அவசரமாக மூடப்பட்டன; மக்கள் பதற்றம் அடைந்த நிலையில் காணப்பட்டனர்.

கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய தூர சேவைகளில் ஈடுபடும் மினிபஸ்கள் பஸ் நிலைய சுற்றுடலை விட்டு வெளியேறி ஆரியகுளச்சந்தி, வெலிங்டன் சந்தி ஆகியவற்றில் தரித்து நின்றன.

சிலமணி இடைவெளியின் பின் நகரம் வழமைக்குத் திரும்பியது. (ஒ-5)

## வன்னிக் காடுகளில் 24 மணி நேரமும் தொடர்ந்து தேடுதல்

யாழ்ப்பாணம், ஆக. 24

''பராலைற்'' வெளிச்சங்களுடன் இந்திய அமைதிப்படையினர் வன்னிக்காடுகளில் தேடுதல் நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்துகின்றனர்.

வன்னிப்பகுதிகளில் விடுதலைப் புலிகளைத் தேடும் படலம் இரவு பகல் இருபத்துநான்கு மணிநேரமும் தொடர்ந்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தேடுதல் நடத்தும் இடங்களில் ஆண்களை மட்டும் படையினர் கைதுசெய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடரும் தேடுதல் நடவடிக்கையை அடுத்து பொதுமக்கள் இடம்பெயர்ந்து வருவதாகவும் தெரியவந்துள்ளது. (ஒ-10)

## காரைநகரில் கடும் தேடுதல்

காரைநகர், ஆக. 24

கடந்த சனிக்கிழமை வலந்தலையில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலை தொடர்ந்து காரைநகர் பகுதியில் பெரும் எண்ணிக்கையான அமைதிப்படையினர் கடும் தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

குறிப்பாக களபூமி, துறைமுகம், வலந்தலை, சிவகாமி அம்மன் கோவிலடி ஆகிய பகுதிகளில் கடும் தேடுதல் நடத்தப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



போக்குவரத்து மந்திரியாருக்கு சப்பாத்துக்கு ஏத்தமாதிரி காலை வெட்டத்தான் தெரியும் போலை...... காலுக்குப் பொருத்தமாய் சப்பாத்துத் தைக்கத் தெரியாதோ......!

## சென்றிக்கு முன் வாகனங்கள் வேகமாகச் செல்லத்தடை

யாழ்ப்பாணம், ஆக. 24

இந்திய அமைதிப் படையினரின் ''சென்றிகளுக்கு'' முன்பாக வாகனங்களை வேகமாக செலுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

சகல வீதிகளின் முன்பாகவுள்ள சென்றி நிலைகளிலும் இதற்கான அறிவிப்புப் பலகைகள் போடப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்று நீர்வேலிப் பகுதியில் குறிப்பிட்ட வேக எல்லையைத் தாண்டிச் சென்ற வாகனத்தின் சாரதி ஒருவர் படையினரால் எச்சரிக்கை செய்யப்பட்டார். (ஒ-10)

## குண்டு வெடிப்பினால் சேதமடைந்த மன்னகுளம் ரயில் பாதை திருத்தப்பட்டு விட்டது

மாங்குளம், ஆக. 25

மாங்குளத்துக்கு அருகில் மன்னகுளம் பகுதியில் சேதமாக்கப்பட்ட ரயில் பாதை சீரமைக்கப்பட்டு விட்டது.

ரயில்வே தொழிலாளர்களும், மாங்குளம் அமைதிப்படை ஜவான்களும் சீர்திருத்த வேலைகளை மேற்கொண்டனர்.

இதனை அடுத்து மாங்குளத்திற்கு சரக்கு ரயில் வந்தது. அதில் மாவும் மற்றும் தாண்டவாளத் திருத்த வேலைகளுக்கான ''சிலிப்பர்'' கட்டைகளும் வந்தன.

கூடியவிரைவில் யாழ்ப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - யாழ் ரயில்சேவையை நடத்த அமைச்சர் உத்தரவாம்

கொழும்பு, ஆக. 24

யாழ்ப்பாணம் வாராந்திர ரயில் சேவையை நடத்தும்படி போக்குவரத்து அமைச்சர் அல்காஜ் எம். எச். முகமது உத்தரவிட்டிருக்கிறார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இச்சேவை கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற நிலக்கண்ணி வெடிச் சம்பவத்தைத் தொடர்ந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சுப் பேச்சாளர் இத்தகவலை தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

## நாளைய ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்கக் கோருகிறது யாழ். அன்னையர் முன்னணி

யாழ்ப்பாணம், ஆக. 24

வடக்கு, கிழக்குப் பகுதி எங்கும் பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு நாளை நடத்த ஏற்பாடு செய்துள்ள ஹர்த்தாலுக்குப் பூரண ஆதரவு அளிக்குமாறு யாழ் அன்னையர் முன்னணியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ் அன்னையர் முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வருடமாகியும் பூஸா முகாமிலும் மற்றும் பல

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா மோதலில்

## 20 இந்திய ஜவான்கள் பலி என்று புலிகள் அறிவிப்பு

லண்டன், ஆக. 24

வவுனியாக் காட்டுப் பகுதிக்குள் நடந்த மோதலில் 20 இந்திய அமைதிப்படை ஜவான்களும் ஒரு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியும் கொல்லப்பட்டனர்.

இப்படி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு காட்டுப் பகுதிக்குள் இந்திய இராணுவம் சென்ற வெள்ளி தாக்குதலை ஆரம்பித்தது. அப்போது இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த 10 வீரர்களும் ரொபர்ட் என்ற போராளியும் கொல்லப்பட்டனர்.

சென்ற ஞாயிறு ஒட்டுவெளியில் நடந்த மோதலில் மேலும் 10 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர்.

'ஒப்பரேஷன் செக்மேற்-3' இன் முக்கிய நோக்கம் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தைப்பூண்டோடு அழிப்பதுதான் என்றும் விடுதலைப்புலிகள் கூறுகின்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

### 1987இல் பாதிக்கப்பட்டவர்கள்

## நிவாரணம் பெற 26ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யவேண்டும்

யாழ்ப்பாணம், ஆக. 24

1987 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது நிவாரண உதவியைப் பெறுவதற்கு எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

26-ஆம் திகதிக்குப்பின்னர் எக்காரணம்கொண்டும் கிராமசேவகர்கள் பதிவுகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் விடுத்த பத்திரிகை அறிக்கை ஒன்றின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் - கொழும்பு தனியார் பஸ் சேவைக்கு தடை வருமா?

கொழும்பு, ஆக. 24

தனியார் பஸ்கள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே நேரடிசேவையில் ஈடுபடுவதைத் தடுக்க அமைச்சு மட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மிக நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

யாழ். ரயில் கொழும்பில் இருந்து வடக்கே எந்த இடம்மட்டும் செல்லுமோ, அந்த இடம் மட்டுமே தனியார் பஸ்களும் சேவை நடத்துவதற்குப் பாதை அனுமதி வழங்கும் திட்டம் ஒன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

24 - 08 - 88
ஆவணி — 08
புதன்கிழமை

சுபநேரம்:
04 35முதல் 06.05வரை

ராகுகாலம்:
12 05முதல் 01.35வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## பொலீஸ் நிலையம் மீது தாக்குதல்

கொழும்பு, ஆக. 24

தெற்கு மாகாணத்தில் மாத்தறைக்கு அருகில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றின் மீது செவ்வாய் அதிகாலை ஜே. வி. பி. தீவிரவாதிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

நல்லைக் கந்தன்
திருவிழாவை முன்னிட்டு
"ஷப்ரு" வினால்
வருடாவருடம் நடத்தப்படும்
புதிர்ப்போட்டி
விவரங்கள்
நல்லை ஆதீன முன்றலில்
24-8-88 (இன்று) புதன்கிழமை
பெற்றுக்கொள்ளலாம்.
ஷப்ரு நிதி நிறுவனம்
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மங்களகரமான
திறப்பு விழா
ஈஸ்ரன் ரேடர்ஸ்
நாளை 25-8 88
வியாழக்கிழமை
காலை 7.45மணி முதல் 9.00மணிவரை வரும் சுபவேளையில்
95/2 ஸ்ரான்லி வீதியில்
அமைந்துள்ள எமது ஸ்தாபனத்தை திறந்துவைக்க நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் சமுகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
விநியோகஸ்தர்கள்:
கால்நடை உணவுவகைகள், உரவகைகள்
EASTERN TRADERS
[Poultry Animal Foods & Fertilizers]
95/2, Stanley Road,
JAFFNA.
(5970)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் ஸ்ரீல் அலுமாரி, தேக்கு அலுமாரி, கட்டில் மெத்தைகள், விருக்கை கதிரைகள், கண்ணுடி மேசைகள், Hall set, Oven, சாப்பாட்டு மேசைகள், குத்துவிளக்கு மற்றும் பலவித பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜா 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தி அருகில்) (5843)

**வான், மோட்டார் சைக்கிள் விற்பனை**

ஓஸ்ரின். J4 மொடல் டிலிவரி வான், கொண்டா CB 90 மோட்டார் சையிக்கிள் விற்பனைக்கு உண்டு. நல்ல நிலையில் உள்ளவை. விலை - நேரில் கதைத்துக் கொள்ளலாம். K. பரமநாதன், சுருவில். Bus Route No, 780. (ஊர்காவற்றுறை) (5928)

புதிய Honda Recon ditioned புதிய பழைய Model C 90, C 70, C50, MD90, MB5, மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. No 16, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (A G.A. அலுவலம் முன்பாக) (5965)

**காணி விற்பனைக்கு**

நுணுவில் கண்டிவீதிக்கு அண்மையில் கல்வயல் ரோட்டில் 5 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (5914)

**வலம்புரிச் சங்கு விற்பனைக்கு**

வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்து ஆராதிப்பதால் சகல சௌபாக்கியங்களும் பெருகி சுபீட்சம் உண்டாகும். கோவில் தேவைக்குரிய அளவிலும் உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். T. உருத்திர சோமேஸ்வரக் குருக்கள், பிள்ளையார் கோவில் வீதி, கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை. (5923)

**மைசூர் No. 1 அரிசி விற்பனை**

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது No.1 அரிசி. சகலதேவைக்கும் - கல் - இல்லாத சுத்தம், சுவை, தரம் நிறைந்த மைசூர் No. 1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய். (5807)

**இறைச்சிக் கோழிகள்**

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C/6063)

**சீட்டிழுப்பு**

வடபகுதி 'லிபே'வின் ஞாபகார்த்த நூலக நிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு செப் 10 ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். லிபே இணைப்பாளர் S.S. சத்தியமூர்த்தி. (5967)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

Prima Lohmann வெள்ளை சிவப்புப்பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், HY-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (சி/6066)

**திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்**

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

### தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் ஹோட்டலுக்கு ரீ மேக்கர், ஐஸ் கிறீம் தயாரிப்பாளர்சமையல்வேலையில் நன்கு அனுபவம் உடையவர்கள். இடியப்பம், பிட்டு தயாரிக்கக்கூடியவர்கள் வெயிற்றர் வேலையில் நன்கு அனுபவமுடையவர்கள் தேவை. நேரில்வரவும் காலை 9. 00 மணிமுதல் 12 00 மணி வரைக்கும். தொடர்பு கொள்ளவும் இல. 52 மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்தி அருகாமை) யாழ்ப்பாணம். (5845)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்/மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. [யாழ்/இந்து ஆரம்பபாடசாலை யாழ்/இந்துக்கல்லூரி சுற்றுடலில் விரும்பத்தக்கது.] 337, C/o உதயன், யாழ்ப்பாணம். (5925)

**மணமகன் தேவை**

யாழ்ப்பாண வேளாள குல சுத்தோலிக்க மத 30 வயது கலைப்பட்டதாரி ஆசிரியைக்கு பெற்ரோர் தகுந்த மணமகனைத் தேடுகின்ருர்கள். சீதனமாக ஒருலட்சம் காசும் நகையும் வீடு கட்டுவதற்குரிய காணியும் கொடுக்கப்படும். முழு விபரத்தையும் முதற் கடிதத்தில் சரவும். 338, C/o உதயன், யாழ்ப்பாணம். (5926)

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 48 ஆம் இல்லத்தின் மேல்மாடியில் இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு பாணவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு:- R. அல்பொன்ஸ். (5963)

### வகுப்புகள்

Radio, T. V, Air-condtioning, Refrigeratoin, Draftsmen வயறிங், வெல்டிங், வைண்டிங், பிளம்பிங், மோட்டார் மெக்கானிக் Typing, Spoken English மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த பொறியியல் நிபுணர்களால் கற்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa, Engineering Aid Hall, 328, நாவலர் வீதி, [ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்] யாழ்ப்பாணம். (5918)

**பிரெஞ்ச் மொழி**

1988 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட "பிரெஞ்ச் மொழி" வகுப்புக்கள் சனிக்கிழமை கட்டணத்தில் 1-9 88 இல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு:- "Alliance Francaise De Jaffna" (யாழ்/பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம்) 130, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [5929]

**SPOKEN ENGLISH with Grammar**

வெள்ளி தவிர்ந்த ஏனைய ஆறு நாட்களும் நேரம்: காலை 7.30-8.30 ஆரம்பம் 27-08-88. தூர இடங்களில் இருந்து வருவோர்க்கு இருமணித்தியால வகுப்பு திங்கள், புதன் நாட்களில் காலை 10.30 -12.30. ஆரம்பம்: 29-08-88. தொடர்பு: S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (5849)

**DIPLOMA IN NURSING**
**தாதியர் பயிற்சி**

இரண்டாம்பிரிவு வகுப்புக்கள் தகுதிவாய்ந்த டாக்டர்களினால் செப்டம்பரில் ஆரம்பம். விபரங்களுக்கு:- எலைற் ரியூசன் சென்ரர், மானிப்பாய் அல்லது நவீன வைத்தியசாலை உடுவிலில் காலை 9முதல் 11 மணிவரை தொடர்பு கொள்ளவும். (5954)

**இந்து நாகரிகத்தில் கலைகள்**

வெளிவந்து விட்டது! "இந்து நாகரிகத்தில் கலைகள்" G. C. E. A/L G. A. Q; இராமநாதன் நுண்கலைப்பிரிவுத் தேர்வுளில், கலைகள் பற்றிய பகுதிக்கு இன்றியமையாததோர் உதவி நூல். ஆக்கியோன் K.M செல்வரத்தினம் B. A. Hons விலை 19/50 ஸ்ரீலங்கா, பூபாலசிங்கம் புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (5694)

**தவறிவிட்டது**

இ. தங்கேஸ்வரன் ஆகிய எனது அடையாள அட்டை இல: 472890581V போஸ்டன் நல்லூர் கொடியேற்றம் அன்று நல்லூர் கோயில் உள்வீதியில் தவறிவிட்டது இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5959)

**Wanted Security Guards**

A Leading financial institution requires Security Guards. Preference will be given to ex-forces personnel or experienced persons

Apply with Bio-data giving names of two non related referees to No. 181, C/o. Uthayan, Jaffna.

# புலிகளைக் கைது செய்து ராஜீவ் பழிவாங்குகின்ருர்

## ஜானகி தாக்கு

சென்னை, ஆக 24

விடுதலைப் புலிகளைக் கைது செய்ததன் மூலம் ராஜீவ் காந்தி அவர்களைப் பழிவாங்குகிருர். இது கொடுமையிலும் கொடுமை.

—இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கடுமையாகத் தாக்கி பேட்டியளித்திருக்கிருர் அ. இ. மு. க. (ஜா) அணித் தலைவர் ஜானகி இராமச்சந்திரன்.

கட்சியின் உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் கூட்டம் அண்மையில் சென்னையில் நடைபெற்றது.

ஜானகி தலைமைவகித்தார். வள்ளிமுத்து வீரப்பன், ராகவானந்தம், ப. உ. சண்முகம், மாதவன், பொன்னையன், காளிமுத்து, ராசாராம், முத்துசாமி, வி. வி. சாமிநாதன், ஆனூர் ஜெகதீசன், சத்தியவாணிமுத்து, துரை கோவிந்தராஜன், அருணுசலம், மோகனரங்கம், லியாகத் அலிகான், நடிகர் பாக்யராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிந்த பிறகு ஜானகி பேட்டி அளித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் கூறியதாவது:-

தற்போதைய அரசியல் நிலவரம் பற்றியும், தமிழீழ விடுதலைப் புலிகளைக் கைது செய்து இருப்பது பற்றியும் விவாதித்தோம்.

விடுதலைப்புலிகளை சிறையில் அடைத்து இருப்பது தமிழ்நாடு மக்களிடம் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தி உள்ளது.

### பழிவாங்குவதா?

மத்திய அரசு விடுதலைப் புலிகளைப் பழிவாங்கும் போக்கில் ஈடுபட்டு இருப்பது மிகவும் வேதனையைத் தருகிறது. சமீபத்தில் ராஜீவ் காந்தி தமிழகம் வந்த போது விடுதலைப் புலிகளைத் தாக்கிப் பேசினர். அதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டு இருப்பது அவருடைய பழிவாங்கும் போக்கையே காட்டுகிறது.

### விடுதலை செய்க.

கை, கால்களை இழந்தும் குண்டடி பட்டும் சிகிச்சை பெற்றுவரும் போராளிகளைகூட கைது செய்து இருப்பது கொடுமையிலும் கொடுமை.

தமிழகத்தில் அபயம் கேட்டு அடைக்கலம் புகுந்துள்ள விடுதலைப் புலிகளைப் பழிவாங்குகிற முயற்சியை உடனே நிறுத்த வேண்டும் என்று பிரதமரைக் கேட்டுக் கொள்கிறேன் என்ருர். (உ-4)

## சரசாலையில் மாட்டுவண்டி சவாரிப்போட்டி

சாவகச்சேரி, ஆக.24

வடமாகாண ரீதியில் நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் இம்மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

ஆறுமுகம் மகேஸ்வரன் [மாவி] என்னும் இ. போ. ச. நடத்துனரின் அகாலமரணம் ஞாபகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்போட்டிகள் சரசாலை மாத்களாய்தரவையில இடம்பெறும். (உ-31)

முல்லைத்தீவில் பல இடங்களில்

## கிராமசேவகர்கள் இல்லை; மக்கள் அவதி

ஒட்டுசுட்டான், ஆக24

முல்லைத்தீவு மாவட்டம், கரைத்துறைப் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பல கிராமசேவகர்கள் தமது அலுவலகங்களில் சடமையாற்ற முடியாத நிலையில் அந்தப் பகுதிகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதன் காரணமாக இந்தப் பகுதி மக்கள் நிவாரணங்கள் மற்றும் உணவு முத்திரைகள் என்பவற்றை பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். சிவில் நிர்வாகமும் இந்தப் பகுதிகளில் முற்ருகச் சீர் குலைந்து உள்ளது.

பிரஸ்தாப உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த வற்ருப்பளை, தண்ணீருற்று, நீராவிப்பிட்டி, சணுக்கேணி, முள்ளியவளை கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகளின் கிராமசேவகர்களே இவ்வாறு இடம் பெயர்ந்தவர்களாவார்.

இந்தக் கிராமசேவையாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய காட்டு விநாயகர் சந்தி, பூதன் வயல் 3 ஆம் கட்டை, செங்குந்தா வீதி ஆகிய இந்த இடங்களில் முகாமிட்டிருக்கும் இந்தியப் படையினர் அடிக்கடி அப் பகுதிகளைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

அவர்கள் அத்தகைய தேடுதல்களின் போது கிராம சேவையாளர்களை முகாமிற்கு அழைத்து அங்கு தங்களுக்குச் சில கடமைகளைச் செய்யுமாறு பணிப்பதாகவும் —

இதை அறிந்த போராளிகள் முகாமிற்குப்போகக்கூடாது என்று எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தை அரச அதிபருக்கு தெரியப்படுத்திய பின்பு, கிராமசேவையாளர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தங்கள் இடங்களிலிருந்து இடம் பெயர்ந்துள்ளார்களெனத் தெரியவந்துள்ளது. (உ-113)

சென்னையில்

## துப்பாக்கியுடன் இலங்கையர் இருவர் கைது!

சென்னை, ஆக. 24

பாஸ்போர்ட் இல்லாமல் சென்னையில் தங்கியிருந்ததாகக் கூறப்படும் இருவரிடமிருந்து இயந்திரத்துப்பாக்கி ஒன்றையும் வயர்லெஸ் கருவி ஒன்றையும் பொலீஸார் கைப்பற்றினர்.

பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையில் தங்கியிருந்த சேதுபதி, செல்வராஜ் ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்தில் இழக்குப் புத்தூரைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் பொலீஸ் விசாரணைக்காக காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ)

# எல்லா விடயங்களையும் துப்பாக்கியின் பலத்தால் சாதித்துவிட முடியாது

## அமைதிப்படை அதிகாரி கூறுகிருர்

கரவெட்டி, ஆக. 24

துப்பாக்கிகளின் பலத்தால் மட்டும் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியாது. அதேசமயம் மிகக் குறுகிய கால எல்லைக்குள் அளவு கடந்த அபிலாஷைகளையும்நிறைவேற்றிவிட முடியாது.

இவ்வாறு அமைதிகாக்கும் படையின் நெல்லியடிப்பகுதி தளபதி எஸ். கே. சயூரியா அண்மையில் நெல்லியடி முகாமில் நடந்த மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்;

"சமாதானப் பேச்சுவார்த்தைகள் உயர்மட்டத்தில்தான் நடக்க வேண்டுமென்று ஒருவிதி இல்லை. கீழ்மட்டத்தில் இருந்தும் சமாதானத்தைக் கட்டி வளர்க்க முடியும்" என்ருர்.

இதுவரை காலமும் தமிழ் மக்களில் பெரும் பான்மையானோர் எந்தப் [illegible] அவர்கள் இன்று அப்போராளிகளுக்கு புத்திமதி கூறி ஒரு சமாதான உடன்பாட்டிற்கு வர வற்புறுத்த வேண்டும்.

பொதுமக்கள் கால வரையறை இன்றி பிரச்சினைகளின் மத்தியில் தவித்துக்கொண்டிருப்பதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்றும் அவர் சொன்னர்.

கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை போதகர் வண. எஸ். கதிராமர் அங்கு பேசும்போது;

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் இந்திய அமைதிப்படை வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து வெளியேறுவது மக்களுக்கு ஆபத்தாக முடியும் என்ருர்.

சமாதானத்தைக்கட்டி வளர்க்க அனைவரும் சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னர்.

இக்கூட்டத்திற்கு நெல்லியடி பிரதேசத்தில் உள்ள அரச ஊழியர்கள், பிரசைகள் குழு, [illegible] ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். [உ-70]

## வாழைகளுக்கு குருத்தடைப்பு நோய்

சுன்னுகம், ஆக 24

வாழைப் பழத்தின் விலை முன் எப்பொழுதும் இல்லாத அளவுஅதிகரித்துள்ளது. குருத்தடைப்பு நோய் காரணமாக வாழைகள் குலைபோடாததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

கடந்த அசம்பாவித காலங்களின் போது வாழைகள் கவனிக்காமல் கைவிடப்பட்டதும் அடிக்கடி ஊரடங்கு அறிவித்தலின் காரணமாக ஒழுங்காக நீர்ப் பாய்ச்ச முடியாதிருப்பதுமே குருத்தடைப்புக்கான காரணம் எனக் கூறப்படுகிறது. (ஒ-27)

# யாழ் ஆஸ்பத்திரி 3 மாடிக் கட்டடத்தின் அமைப்பு வேலை ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஆக 24

யாழ். ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்டு வந்த மூன்று மாடிக் கட்டட வேலைகள் யாவும் தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. சிவில் நிர்வாகம் சீரடைந்த பின்னரே கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது.

யாழ் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

இக்கட்டடத்திற்கான பூர்வாங்க வேலைகள் 1983 ஆம் ஆண்டளவில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 1985 ஆம் ஆண்டிலேயே அத்திவாரம் போடப்பட்டது. கட்டட அமைப்பிற்கான மொத்தச் செலவினம் 2 கோடி 80 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டிருந்தது.

இதுவரை சுமார் ஒரு கோடி 20 லட்சம் ரூபா வரை கட்டட அமைப்பிற்காக செலவிடப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டடத்தை அமைப்பதற்காக அரசாங்கத்தின் செலவுத்திட்டத்தில் மூலதனநிதிஒதுக்கீட்டின் கீழ் வருடாவருடம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இக்கட்டடம் பூர்த்தியானல் வட பகுதி மக்களின் மருத்துவ தேவை ஓரளவாவது பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

இக் கட்டடம் பூர்த்தியாகும்போதுமேலும் 490 படுக்கை வசதிகள் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கிடைக்கும்

தற்போதைய அரசியல் சூழ்நிலைகாரணமாக நிதி ஒதுக்கீடு நடவடிக்கை மேற்கொள்ள முடியாமல் இருப்பதனலும்யாழ் செயலகம் ஒழுங்காசச் செயற்படாததாலும் கட்டட வேலைகள் தடைப்பட்டுள்ளன. -இவ்வாறு ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-5)

## உடன் தேவை

நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து (ஆண்கள் மட்டும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அரசாங்க / கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் கடமை புரிந்துள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தமது சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

வெற்றிடங்கள்:- கணக்காளர் / நிறைவேற்று அலுவலர் / காசாளர் / / எழுதுவினைஞர்

தகைமைகள்;- (i) கணக்காளர் / நிறைவேற்று அலுவலர் உரிய கல்வித் தராதரங்களுடன், வயது 40 க்கு மேல் இருத்தல் வேண்டும்.

சம்பளம்: மாதம் 1500/-

பிணை: ரொக்கம் 5.000/-
ஆதனம் 10 000/-

(ii) காசாளர் / தமிழ் தட்டச்சுப் பயிற்சி தெரிந்த எழுதுவினைஞர்

வயது:- 35 - 40க்குள் இருக்க வேண்டும்.

சம்பளம்:- ரூபா 1200/-

பிணை:- காசாளருக்கு ரொக்கம் 3,000/-
ஆதனம் 5,000/-

செலுத்தப்படும் பிணைப்பணத்திற்கு வட்டி தரப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:- 15-09-88**

மேற்கொண்டு விபரங்களுக்கு செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்

ஆ. தியாகராசா
கௌரவ செயலாளர்,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினதீவு. (C-6326)

## ROCK ENGINEERS CONTRACTORS

### குழாய்க் கிணறுகள்

**ரூபா. 6500/- மட்டுமே "S"லோன் பைப் உட்பட**

மக்களின் நன்மை கருதி குறைந்த செலவில்கூட ஒரு மொடேர்ண் முறையில் உத்தரவாதத்துடன் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுப்பதற்கு பலவருட அனுபவமுள்ள எமது நிறுவனம் முன்வந்துள்ளது.

மனிதனின் சக்தியையும், மெஷினின் (இயந்திரம்) சக்தியையும் பாவித்து செய்யும் ஓர் கூட்டுமுறை (Combine Method) நீங்கள் உங்கள் மோட்டரோ, வோட்டர் பம் மூலமோ தொடர்ச்சியாக 24 மணித்தியாலமும் இறைத்துப் பார்க்கலாம். மின்சாரமோ, வோட்டர் பம்மோ இல்லாதவர்களுக்கு கைப்பம்பு (Hand Pnmp) பூட்டிக் கொடுக்கப்படும்.

குறிப்பு:- தனியே மெஷின் மூலம் அடிப்பதற்கு முன்னர் தொடர்பு கொண்டவர்களுக்கு, வேலை தொடங்கும் திகதிகள் கடித மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தயவுசெய்து கந்தோர் நேரங்களில் மட்டும் சந்திக்கவும்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**றெக் என்ஜினியர்ஸ்**
பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.
(5897)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உயர் கல்லூரி

## A/L 89

கலை/வர்த்தகம்

**1 வருட வகுப்புக்கள்**
ஆரம்பமாகிவிட்டன

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | குமாரவேல் |
| கணக்கியல் | — | ஸ்ரீ |
| வர்த்தகம் | — | தேவா |
| தமிழ் | — | குழந்தை |
| புவியியல் | — | குணராஜா |
| இந்துநாகரிகம் | — | அருள்நங்கை |
| அளவையியல் | — | சயந்தன் |
| அரசியல் | — | குமார் |

## A/L 90

**வகுப்புக்கள் ஆரம்பம்: 3-9-88**
(8-00 மணி)

**Spoken English**
With Grammar

4 ஆவது பிரிவு மாலை நேர வகுப்பு
**ஆரம்பம்: 3-9-88** (மாலை 4 மணி)

விபரங்களுக்கு:
**S. அருள்நங்கை**
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C-6256)



உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 8ஆம் நாள் (24 - 08 – 1988) புதன்கிழமை காலை 6-00 மணி முதல் 8 மணி வரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருவளர் செல்வன்
மார்க்கண்டு
**சிவதமாரன்**
(பொறியியலாளர்)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருவளர் செல்வி
பாலசுப்பிரமணியம்
**அனுராதா**
(ஆசிரியை)
அவர்களுக்கும்

ரொறங்கோ நகரிலுள்ள பிள்ளையார் கோவிலில் திருமணம் நடைபெறும்.

கார்த்திகேசு
மார்க்கண்டு
குடும்பத்தினர்
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

K. L. பாலசுப்பிரமணியம்
குடும்பத்தினர்
நீர்வேலி தெற்கு
நீர்வேலி.

(5848)


# மன்னார், வவுனியா, முல்லைத்தீவு
# அடகு நகைகளை ஹெலிமூலம் அனுப்புவதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஆக.24
வடபகுதியிலுள்ள மக்கள்வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகள் கொழும்பிலிருந்து இராணுவஹெலிக் கொப்டர்கள் மூலம் வங்கிக் கிளைகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

மன்னார், வவுனியா முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்குச் சொந்தமான நகைகள் விரைவில் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை இராணுவத்தளபதி ஹமில்டன் வனசிங்ஹ மேற்கொண்டுள்ளார்.

இராணுவ ஹெலிக்கொப்டர்கள் மூலம் இந்த நகைகள் அனுப்பி வைக்கப்படும். (உ-ஐ)

# நெற்காணிகளின் பதிவுக் கட்டணம் அதிகரிப்பு

பண்டத்தரிப்பு, ஆக. 24
கமநலசேவை நிலையங்களில் நெற்காணிகளை பதிவு செய்வதற்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் ஐந்துரூபாவாக இருந்த கட்டணம் இப்போது 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாதத்திலிருந்து அதிகரிக்கப்பட்ட புதிய கட்டணம் அறவிடப்படும்.

யாழ். கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. த. பரமலிங்கத்திடம் இது குறித்துக் கேட்டபோது —

''நெற்காணிகள் பதிவுகளுக்கு தற்போது முன் எப்போதும் இல்லாதளவு ஆட்சேபனைகள் வருவதால், இரு பகுதியினரையும் பதிவுத் தபால்மூலம் அழைத்து விசாரித்து யார் உண்மையான பதிவிற்கு உரியவர் எனத் தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்கு அதிக செலவுகள் ஏற்படுகின்றன. அதற்காகவே இந்தக் கட்டண அதிகரிப்பு என்று அவர் சொன்னார். (உ-120)

# காரைநகரில்
## பனம் பொருள் பயிற்சி நிலையம்

வேலணை, ஆக 24
பனம் பொருள் உற்பத்திக் கைப்பணிப் பயிற்சி நிலையம் ஒன்று கடந்த 15 ஆம் திகதி காரைநகரில் திறந்து வைக்கப்பட்டது.

காரைநகர் 'பொருட்' நிறுவன திட்ட இணைப்பதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நிலைய ஆரம்ப வைபவத்தில் பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்களில் ஒருவரான திரு. எஸ். பாலசிங்கம் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி பயிற்சி நெறியைத் தொடக்கி வைத்தார்.

இருபத்தைந்து யுவதிகள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர்.

'பொருட்' நிறுவன திட்டமிடல் உந்தி;ார யோகத்தர்களாக திரு. கே. குணேந்திரதாசன், திரு, ரி. தேவதாசன், திருமதி ஜசோதா சிவானந்தன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

பனை ஓலை, பனை நார், பனந்தும்பு என்பனவற்றிலான கைப்பணி உற்பதிப் பயிற்சிகள் இப்பயிற்சி நிலையத்தில் வழங்கப்படவிருக்கின்றன. (உ-167)

# கிளிநொச்சி விவசாயிகள்
## அறுவடை செய்ய முடியாது அவதி

வட்டக்கச்சி, ஆக. 24
கிளிநொச்சியில் சிறுபோக நெற்சாகுபடி செய்த விவசாயிகள் விளைந்த பயிரை அறுவடை செய்ய முடியாது அவதிப்படுகின்றனர்.

கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளே இதற்குக்காரணம்.

வழமையாக கிளிநொச்சிப் பகுதியில் சிறுபோக நெற்சாகுபடிக்கு என காணிச் சொந்தக்காரர் ஒவ்வொருவருக்கும் ஒன்றரை ஏக்கர் நிலத்துக்கு குளத்துநீர் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது தண்ணீர் பற்றாக்குறை காரணமாக அரை ஏக்கர் தண்ணீர் வழங்கப்பட்டது.

அந்த அரை ஏக்கரில் விளைந்த நெல்லையும் அறுவடை செய்ய முடியாது விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

தொடர்ந்து கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்று வரும் ஷெல் தாக்குதல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதி விவசாயிகளும், தொழிலாளர்களும் வயலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர். இதனால் விளைந்த நெல்லை அறுவடைசெய்ய முடியாதுள்ளது. (உ-ரி)

# கோவில்கள் மக்களை வாழ்வாங்கு வாழவைக்கின்றன

கொடிகாமம், ஆக. 24
''கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பர் ஆன்றோர். ஆனால் தென்மராட்சியில் நடந்த பாதயாத்திரை மூலம் 226 கோவில்களுக்கு மேலாக இருக்கின்றனவென்பது உறுதியாக்கப்பட்டுள்ளது. இத்தகைய கோவில்களில் தடையின்றி நடைபெறும் நித்தியபூசைகளும் கும்பாபிஷேகங்களும் மக்களை வாழ்வாங்கு வாழவைப்பனவாகும்.

மீசாலை வடக்கு ஸ்ரீ இராமாவில் கந்தசாமி தேவஸ்தான பரிவார மூர்த்தியாகிய விநாயகப் பெருமானின் மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு விழாவில் தலைமைவகித்து சொற்பொழிவாற்றிய சாவகச்சேரி நீதவான் புலவர் திரு. மு. திருநாவுக்கரசு இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் இறைவனைப் பற்றிப் பேசியும், பாதயாத்திரைகள் செய்தும் தொண்டாற்றும் உத்தமர்.

[illegible] செல்லத்துரை ஜே. பி. [illegible] பாடல்களை மனம் மெய் கசிந்துருகப்பாடி மக்களை இறைவன்பால் வழிப்படுத்துபவர். இவர் இந்நாட்டுக்குக் கிடைத்த தவப்பயன் எனலாம்'' என்றார்.

கோவிற் பரிபாலகர் ஆசிரியர் திரு. மு. அருணாசலம், அதிபர் திரு. ரி. இராமலிங்கம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. முத்தையாவுக்கு கும்பாபிஷேகப் பிரதம குரு சிவஸ்ரீ ச. மகாலிங்க சிவக்குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். டாக்டர் எஸ். செல்வராசா நன்றியுரை கூறினார்.

சுவாமி வீதியுலா வந்ததும் மகேஸ்வரப்பூசை நடைபெற்றது. (ஐ- 75)

## வருடாந்த பொதுக்கூட்டம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திரு. சு. சிவகுரு தலைமையில் வைத்தியசாலையின்புதிய மண்டபத்தில் கூட்டம் நடைபெறும். (உ-120)

வெள்ளைக் கடற்கரைப் பகுதியில்
# படகு மூழ்கியது; எனினும் 13 மீனவரும் தப்பினர்

குருநகர் ஆக 23
13 மீனவர்களுடன் திரும்பிக் கொண்டிருந்த படகு ஒன்று சாட்டி, வெள்ளைக் கடற்கரைப் பகுதியில் கடலில் மூழ்கியது.

எனினும் அதில்சென்ற மீனவர்கள் அனைவரும் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

அன்றையதினம் மீன் பிடித்து விட்டு 13 மீனவர்கள் அப்படகில் பிற்பகலில் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

'சுக்கா'னில் வலை திடீரென சிக்கி இறுகியதால் 'சுக்கான்' பொருத்தப்பட்டிருந்த படகின் 'கடையால்' பலகை உடைந்தது. இதனால்படகுக்குள் கடல் நீர் புகுந்ததில் படகு மூழ்கியதாகக் கூறப்பட்டது.

படகில்இருந்தவர்களை பின்னால் வந்த வேறொரு படகு காப்பாற்றியது.

படகில் இருந்த மீன்பிடி உபகரணங்களும் மீட்கப்பட்டன. (உ- 51)

## மீளக் குடியேற நிவாரணம்

சுன்னாகம், ஆக. 24
சுன்னாகம் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமான நடவடிக்கைகளை வலி-தெற்குப் பிரதேச சபையினர் துரிதப்படுத்தியுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் மேற்படி பிரதேச சபைக்குட்பட்ட கிராம சேவகர்களால்தற்போது பொது மக்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

இவ் விண்ணப்பங்கள் 1987 ம் ஆண்டு இடம் பெயர்ந்தகுடும்பங்களிடமிருந்தே ஏற்றுக்கொள்ளப்படும். என சுன்னாகம் கிராமசேவகர் திரு. தில்லை நடராஜா உதயனிடம் தெரிவித்தார். (உ-27)

## தபால் நிலையத்தை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

காங்கேசன்துறை ஆக 24
காங்கேசன்துறை தபால் நிலையத்தை புனரமைக்க 85 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வன்செயல் சம்பவங்களின் போது இத்தபால் நிலையம் சேதமடைந்திருந்தது.

இதே போன்று சுண்டுக்குளி தபால் நிலையத்தை புனரமைக்கும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. (உ-68)

## உணவு முத்திரை விநியோகிக்கப்பட்டது

மாங்குளம், ஆக, 24
மாங்குளம் பகுதியில் உணவுமுத்திரை வழங்கும் வேலைகள்முடிவடைந்துள்ளன.

பாண்டியன் குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம சேவகர் பிரிவுகளிலும் உணவு முத்திரைவழங்கும்வேலைகள் முடிவடைந்துள்ளதாக [illegible] உதவி அரசாங்க அதிபர் திரு. [illegible] தெரிவித்தார். (உ-94)

யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படும்
# வெளிநாட்டுக் கடிதங்கள் கொழும்பு நகர வீதிகளில்!

பருத்தித்துறை, ஆக24
கொழும்பு மாநகரில் வீதியோரங்களிலுள்ள தபாற்பெட்டிகளில் இடப்படும் வெளிநாட்டுக் கடிதங்களிலுள்ள முத்திரைகள் களவாடப்படுவதுடன் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து அனுப்பப்படும் வெளிநாட்டுக் கடிதங்கள் பல வீதியோரங்களில் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது போன்ற சில கடிதங்கள் பற்றிய விசாரணைகள் தற்போது நடைபெறுகின்றன.


இதேவேளை பொதுமக்கள் தமது பிறநாட்டுக்கான கடிதங்களை கொழும்புக்குச் செல்லும் பிரயாணிகளிடமும் தனியார் வாகனங்களிலும் கொடுத்து அனுப்புகிறார்கள்.

இவ்வகைக் கடிதங்கள் பொறுப்பற்ற வகையில் கொழும்பு மாநகரில் வீதியோரங்களிலுள்ள தபாற்பெட்டிகளில் இடப்படுவதனால் அவற்றிலிருந்து முத்திரைகள் நீக்கப்படுகின்றன.

எனவே பொதுமக்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு தங்களது வெளிநாட்டுக் கடிதங்களை பாதுகாப்பாகவும், நிச்சயமாகவும் விலாசதாரரைச் சென்றடைய வேண்டுமாயின் அவற்றை உள்ளூர் தபாற்கந்தோரில் ஒப்படைக்குமாறு தபாற்திணைக்களம்அறிவித்துள்ளதாக பருத்தித்துறை அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-118)


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®
ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

Grant BJK&E PFL 1157

**தினமும் டியூரோல்® அருந்துங்கள், அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.**

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ. (Pfizer) சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.
®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 11ஆம் நாள் (27 – 08 – 88) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் 1.30 மணிவரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

திரு. திருமதி அ. கந்தசாமி
அவர்களின் புதல்வன்
திருநிறை செல்வன்
**அருளானந்தசிவம்**
அவர்களுக்கும்

திரு. திருமதி சொ. இராமநாதன்
[கிராமசபை உத்தியோகத்தர் நெடுந்தீவு]
அவர்களின் புதல்வி
திருநிறை செல்வி
**நாகேஸ்வரி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற நிச்சயித்திருப்பதால் அத்தருணம்
உற்றார், உறவினர், நண்பர்கள்
யாவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம்
★ அன்புடன் அழைக்கின்றோம். ★

[தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை]

குறிப்பு:- மணவாளக்கோலம் மணமகன் இல்லத்தில் காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி
அ. கந்தசாமி
புளியங்கூடல்
ஊர்காவற்றுறை.

திரு. திருமதி
சொ. இராமநாதன்
[கிராமசபை உத்தியோகத்தர், நெடுந்தீவு]
வேலணை மேற்கு, வேலணை.

(5885)



இலங்கை அதிபர்கள் சேவையின் I-ஆம் IIஆம் IIIஆம் தரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான

# போட்டிப் பரீட்சை

1988 ஒக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

## $1\frac{1}{2}$ மாத துரித பயிற்சி வகுப்புகள்

பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை

**ஆரம்பம்: 3 - 9 - 88**

பாடநெறி:- (I) கிரகித்தல், (II) பொது அறிவு (III) கல்விக் கொள்கையும் நிர்வாகமும்.

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் (பி. ப. 1-4 மணிவரை)
★ கட்டணம் ரூபா 250.00 - (முழுப்பயிற்சிக்கும் தரம் I, II)
★ கட்டணம் ரூபா 200.00 – (தரம் III)

விபரங்களுக்கு: நேரில்/தபாலில்.

**ASTAN INSTITUTE**
166/1 HOSPITAL ROAD - JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி)
(C/6265)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# VACANCIES IN SAUDI ARABIA

GOLDEN TRAVELS & TOURS

1. Work Scheduler SR 1100+100 FA
2. H v a c Split Units
   Central Technicians SR 900-1000+ 100 FA
3. A/C Technicians SR 700-800+ 100 FA
4. Appliances Technicians SR 800+100 FA

ஆங்கில அறிவும் Driving Licence உம் அவசியம் வேண்டும்.

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பிரயாணம் செய்யக் கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத்தவறின் கடவுச்சீட்டுத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

காரியாலயங்கள் அனைத்தும் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும் திறக்கப்படும்.

தலைமைக் காரியாலயம்:-

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளை 1: **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
குப்பிளான் சந்தி, குப்பிளான்.

கிளை 2: **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி.

(C 6320)


## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



**இராசையா அசோக் இளமுருகன்**

[ Old Boy of Jaffna Central College & Employee of Northern Industry (Bulbs) Brown Road, Kokuvil ]

தோற்றம் : 03-12-1963 மறைவு : 25-07-1988

மாறாத அன்புடனே வையத்துள் வாழ்ந்தாயே
மானிட வாழ்வினிலே மாண்புடனே
புகழ் படைத்தாய்
தீராத துயரினிலே எம்மை ஆழ்த்திவிட்டு
வராத இடத்திற்குப் போய் விட்டாயே.

உன் பிரிவால் வாடும்

**அம்மா, அண்ணன்மார், அக்காமார், அத்தான்மார், அண்ணிமார், நண்பர்கள்.**

154, கன்னாதிட்டி வீதி.
யாழ்ப்பாணம். (5868)

## பனை அபிவிருத்திச்சபை ஏற்பாடு:

# பனைநடுகை மாதமாக செப்டெம்பர் பிரகடனம்

வேலணை, ஆக. 24

1988 செப்டம்பர் மாதத்தை பனை மரங்கள் நடுகை மாதமாக பிரகடனப்படுத்தி வீடுகள் அமைந்துள்ள ஒவ்வொரு காணிகள் தோறும் பனம் விதைகளை நடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திப் பிரிவு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் தற்காலிக தலைமை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற பனை நடுகை பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் இம்முடிவு செய்யப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் ஊடாகவும், சமூக சேவை ஸ்தாபனங்கள் ஊடாகவும் பொருத்தமான இடங்களிலும், வீட்டுக் காணிகளிலும் பனம் விதை நடுகையை மேற்கொள்வதெனவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின்படி வடக்கு, கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் பத்து விதைகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (உ-167)

## யாழ் மாவட்டத்தில்

# பாடசாலைகளுக்கிடையே கவின்கலைப் போட்டிகள்

பண்டத்தரிப்பு, ஆக. 24

பாடசாலை மாணவரின் கவின் கலைத்திறமைகளை வளர்க்கும் நோக்குடன் யாழ் பிரதேச கல்விப் பணியகம் யாழ்ப்பாண பிரதேச பாடசாலைகளிடையே இசை, நடன, நாடகப் போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இப்போட்டிகள் தொடர்பான சுற்று நிருபங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டிகள் ஆரம்ப பிரிவு, கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை, மேற்பிரிவு என நான்கு பகுதிகளாக நடத்தப்படும்.

ஒரு பாடசாலை நான்கு நிகழ்ச்சிகளில் மட்டும் பங்கு கொள்ள முடியும்.

பாடசாலை மற்றும் கொத்தணி நிலைப்போட்டிகள், செப்டம்பர் மாத முடிவிற்குள் நடைபெறும்.

கொத்தணிப் போட்டியில் முதலிடம் பெறும் பாடசாலைகள் மாவட்டப் போட்டியில் பங்கு பற்றும் தகுதி பெறும்.

கொத்தணி அதிபர்களும் கல்வி அதிகாரிகளும் போட்டிகளை நடத்துவர். (உ-120)

## மக்கள் முகம்

### நெல்லியடி சனசமூக நிலையம்

நெல்லியடி, ஆக 24

நெல்லியடி சனசமூக நிலையத்தின் மீளமைப்புப் பொதுக் கூட்டம் அண்மையில் பிரஸ்தாப நிலையத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. அதன் அங்கத்தவர்கள் வருமாறு.

போஷகர்:- திரு. கா. தெய்வேந்திரநாதன், தலைவர்: திரு. ஐ. சிவநாதன், செயலாளர்: திரு. மா. தயாபரன், உபதலைவர்: திரு. தி. பரமசிவம், உபசெயலாளர்: திரு. வ. கெங்காதரன், பொருளாளரும் நூலகரும்: திரு. இ. ஞானச்சந்திரன், கணக்குப் பரிசோதகர்: திரு. ப. தயாபரன், விளையாட்டுப் போஷகர்: திரு. கே. குலராஜேந்திரம், விளையாட்டுப் பொறுப்பாளர்: திரு. கு. ஜெகதீஸ்வரன்.

நிர்வாக சபை உறுப்பினர்கள்: (1) திரு. க. சந்திரகுமார், (2) திரு. பா. யோகநாதன், (3) திரு. செ. இளங்கோ (4) திரு. ஆ. பகீரதன் (5) திரு. தேவன் (ஐ)

### இந்திராபுரம் கிராம அபி.சங்கம்

பச்சிலைப்பள்ளி ஆக 24

முகமாலை, இந்திராபுரம் கிராம அபிவிருத்தி சங்க அங்குராப்பணக் கூட்டம் அண்மையில் பளைப்பகுதி கிராம அபிவிருத்தி அலுவலர் ம. அழகேசந்திரன் தலைமையில் இந்திராபுரம் மக்கள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

காப்பாளர்:-இ. சேதுராசா, தலைவர்:-கி. கனகசபை. உபதலைவர்கள்;- சி. சிவநாதன், -கு. மேரி மார்க்கிரேட். செயலாளர்:-ஐ. கிருஷ்ணன் உதவிச் செயலாளர்:- க. சந்திராதேவி. பொருளாளர்:-கா. வேலாயுதம் பிள்ளை. கணக்காய்வாளர்:- பா. ஜோர்ஜ்

நிர்வாக சபை உறுப்பினர்கள்; க. சிதம்பரநாதன் தா. கப்பீக்லோ. நவமணி இ. தேவராசா ஆ. ஞானப்பிரகாசம் சி. வேலுச்சாமி பொ. செல்வராசா. (இ)

## வேடியரசன் வரலாற்றுநூல் வெளியீடு

விஷ்ணு புத்திரர்வெடியரசன் வரலாற்று நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 27 ம் திகதி யாழ்-வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

தொல்புரம் மத்திய சனசமூக நிலையம், அகில இலங்கை வெடியரசன் கலா மன்றம் ஆகியவற்றினால் வெளியிடப்படும் இவ்வரலாற்று நூலின் வெளியீட்டு விழா பண்டிதர் க. சச்சிதானந்தம் தலைமையில் நடைபெறும் யாழ்- மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கலாநிதி கா. ரூபாமூர்த்தியின் வரவேற்புரையும், பேராசிரியர் கே. சிவத்தம்பியின் வெளியீட்டுரையும், கலாநிதி இ. பாலசுந்தரத்தின் ஆய்வுரையும் இடம் பெறும்.

# லொறியில் இருந்த பொருள்கள் பறிமுதல்

## வட்டக்கச்சியில் சம்பவம்

வட்டக்கச்சி ஆக 24

இராமநாதபுரம் அமைதிப்படை முகாமுக்கு லொறியில் கொண்டு செல்லப்பட்ட பொருள்கள் இடைவழியில் இனந்தெரியாதவர்களால் பறிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.


பரந்தனில் இருந்து முரசுமோட்டை வழியாக வட்டக்கச்சிக்கு தனியார் லொறி ஒன்று சென்று கொண்டிருந்தது

இடைவழியில் முரசுமோட்டை படைமுகாமில் வைத்து லொறி மறிக்கப்பட்டு இராமநாதபுரம் முகாமுக்கான பொருள்கள் ஏற்றப்பட்டு அனுப்பப்பட்டன.

வட்டக்கச்சி சந்தையடிக்கு லொறி சென்றவேளை அது ஒரு கோஷ்டியினரால் மறிக்கப்பட்டு சோதனை இடப்பட்டது.

சோதனையின் பின் அப்பொருள்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட கோஷ்டியினரால் பறிமுதல் செய்யப்பட்டன. லொறி தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டது. (ஓ - ரி)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு : 03-05-1955

உதிர்வு : 07-07-1988

**வைத்திலிங்கம் அருளம்பலம்**

நீ எங்களோடு இருந்த நாட்களை எடைபோட்டுப் பார்க்கிறோம்!
அதில் நமது — ஏக்கத்தை தீர்க்கிறோம்!
ஒன்றாகப் பயின்றவன்; ஒன்றாகத் துயின்றவன்;
ஒன்றாகத் திரிந்தவன்; இன்று தனியாகப் பிரிந்தவன்
என்ற தவிப்பை ஏற்படுத்தினாயே! போய் வா நண்பனே!
நமது பொங்கும் அன்பையும், புனித அஞ்சலியையும் ஏற்றுப்
போய் வா நண்பனே!

உன் பிரிவால் துயருறும்,

வட்டு. தெற்கு,

**அப்பா, அம்மா, சகோதரன்,**
**மற்றும், உறவினர், நண்பர்கள்,**

[C 6321]

## மீனவர் பிரச்சினை குறித்து விசேட கூட்டத்தில் ஆராய்வு

மயிலிட்டி – நெடுந்தீவு மீனவர்கள் பிரச்சினை குறித்து ஆராய விசேட கூட்டமொன்று நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அண்மையில் கூட்டப்பட்டது. எனினும் தீர்க்கமான முடிவு எதுவும் இக்கூட்டத்தில் எடுக்கப்படவில்லை.

நெடுந்தீவில் வெல்லை என்னும் இடத்தில் மயிலிட்டி மீனவர்கள் வாடிகள் அமைத்து தொழில் செய்வது வழக்கம். ஆனால் இந்த இடத்தில் இவர்கள் வந்துதொழில் செய்வதை முற்றாகத் தடுக்க வேண்டும் என்று நெடுந்தீவில் உள்ள சில ஸ்தாபனங்கள் உதவி அரசாங்க அதிபரைக் கேட்டிருந்தன.

இப்பிரச்சனை பற்றி ஆராய கூட்டப்பட்ட கூட்டத்தில் நெடுந்தீவு மீனவர் சங்கப் பிரதிநிதிகளும், மயிலிட்டி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் இவ்விடயம் ஆராயப்பட்ட போதும் முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிய வந்தது. (உ-68)


## விற்பனைக்கு

''மச்சிங் ட்ருன்ஸ்போமர்'' இணைத்த உறுதியான 5 GY iii, 5 GY, 10 GY, 10 GYA மொடல் சில்வர்போன் அன்ரனு (½''×8'பின் சம்பி 'றிபிளெக்ரர் துருள்பிடித்து உடையாது பாதுகாப்பானது.) அன்ரனுகப், கிளிப் என்பவற்றை விற்பனையாளர், பாவனையாளர், அன்ரனு தயாரிப்பாளர், திருத்துபவர்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

சில்வர் ரோன் எலெக்ரோனிக் 187, மின்சார நிலைய வீதி, (மேல் மாடி) யாழ்ப்பாணம்.

**அன்ரனு கிடைக்கும் இடம்:**

★ மரியநாயகம் ஸ்ரோர்ஸ், 55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
★ அப்துள்லா அன் கோ, 127, கே. கே. எஸ்- வீதி' யாழ்ப்பாணம்.
★ நொதேன் ரெலிவிஷன் சென்ரர் 275, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
★ அன்ரனிஸ் காட்வெயர்ஸ், பண்டத்தரிப்பு.
★ பற்றிமா எலெக்ரிக்கல், பிரதான வீதி, பண்டத்தரிப்பு. (5895)


தமிழை நெஞ்சிலும் தமிழனை தோள்களிலும் தூக்கிச் சுமந்து கொண்டு சமதர்மப் பாதையில் ஈழத்தின் மகத்தான விடுதலை காண விரைந்து சென்று கொண்டிருந்த மாவீரன்

மேஜர் நரேனின் 119ஆம் நாள்

# கண்ணீர் அஞ்சலி



**மேஜர் நரேன்**

(நல்லநாதன் ஜனார்த்தனன்)
(பழைய மாணவன் யா/மத்திய கல்லூரி)

ஈழமண்ணில்: 24-11-1963 ஈழவர் இதயங்களில்: 28-4-1988

நீ
இல்லை என்பது
ஒரு கசப்பான நிஜம்
நீ
இருக்கிறாய் என்பது
ஒரு பொய்யான பிரமை!
நீ
எங்கள் ஆகாயத்தை விட்டு
அற்பாயுளிலேயே அபகரிக்கப்பட்ட
நட்சத்திரம்
நாங்கள் ஞாபகத்தின் பக்கங்களை
புரட்டிப்பார்க்கவில்லை
ஏனென்றால்
எங்கள் மனங்களில் அவை
மனனஞ்செய்யப்பட்டுள்ளன.
ஜனா
எம்மால் அழமுடியவில்லை?
ஏனெனில்
இது அழுகைக்கும் அப்பாற்பட்ட சோகம்
நீ தேசத்தை
நேசித்த போது நிர்ப்பந்திக்கப்பட்ட
மரணம்
உன்னை நேசித்தது தான்
ஜீரணிக்க முடியாதது.
உன் மழலைச் சிரிப்பும் செல்லப் பேச்சும்
நிலைத்து நிற்குமடா!
உனக்கு எமது ஆழ்ந்த
கண்ணீர் அஞ்சலி!

உன் பிரிவால் துயருறும்:

**பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.**

''நரேன் கொட்டேஜ்''
218/9, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (C-6283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

**பொருள்:**
நல்ல அரசன் பொருந்தாத நாடு, மேற்சொன்ன நன்மைகள் எல்லாம் அமைந்திருந்த போதிலும் அவற்றால் பயன் இல்லாமற் போய்விடும்.


உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
24-08-1988 த. வெ. இல. 23


# மனப்படிமம் தெரிகிறது!

பலரும் எதிர்பாராத ஒரு செய்தி

அதுதான்: வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் — என்ற செய்தி விடுபட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்தியே தீருவோம் என்ற அரசின் அறிவிப்புக்கு நேர்மாறானது.

செய்தியின் பிரகாரம், இது சம்பந்தமாக இன்னும் தீர்க்கமாக முடிவு செய்யப்படவில்லை; அரசு தலைமைப் பீடம் ஆராய்ந்து வருகிறது.

எனினும் —

"வடக்கு - கிழக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்தாமல், நாடளாவிய தேர்தலான ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் என்ன?" என்ற சிந்தனை அரச உயர் பீடத்திற்கு வந்தது என்றால் அது ஒன்றே போதும். அரசாங்கத்தின் சுயரூபம், மேனிமினுக்குகள் நீக்கப்பட்ட உண்மையான தோற்றம் காண்பிக்கப்படுகிறது என்ற அர்த்தம் பிறந்து விடுகிறது!

தமிழர்கள் இந்த நாட்டின் சிறுபான்மையினர். அவர்களின் பங்களிப்பு இல்லாமலே இந்த நாட்டை ஆளலாம். அவர்களை அடிமைகளாக, உரிமைகள் இல்லாத இரண்டாந்தரப் பிரஜைகளாக வைத்துக் கொண்டு, இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடாக விளங்கச் செய்து, தமிழர்கள் மீது மேலாதிக்கம் செலுத்தி எமது ஆதிபத்தியத்தை நிலைநாட்ட வேண்டும்—

தமிழர்களின் உரிமைகளை வழங்கக்கூடாது. அவர்களைத் தலையெடுக்கவும் விடக்கூடாது. எல்லா வகைகளாலும் அவர்களை அடக்கி,ஒடுக்கிவைத்து ஆளவேண்டும். ஆட்சி உரிமை எதையும் அவர்களுக்கு வழங்கக்கூடாது.—

இவ்வாறான ஒரு பிற்போக்குச் சித்தாந்தம், கோட்பாடு சிங்கள மக்களிடையே வளர்ந்திருக்கிறது. தாம் ஆளும் இனமாகவும், தமிழன் ஆளப்படும் இனமாகவும் இருக்க வேண்டும் என்ற சிங்களப் பேரினவாதம் அரசியல், சமயம் உட்பட சகல துறைகளிலும் பலமாக வித்திடப்பட்டதன் விளைவு அது.

தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளிடையேயும் சிங்களப் பேரினவாதம் நிறையவும் நிரம்பவும் ஊடுருவி இருப்பதனை மறப்பதற்கு இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல், அதற்கு முதல் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது என்பது முந்திய கோட்பாட்டின் பிரதிபலிப்பே.

அதாவது தமிழ் மக்களைப் பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. அவர்களின் நலன்களில் எமக்கு நாட்டமில்லை. அவர்கள் எக்கேடு கெட்டாலும் நாம் அனுதாபப்படப் போவதில்லை. நாமுண்டு எமது இனமுண்டு; எமது இனத்தின் வளர்ச்சியிலும், நலனிலும் நாம் அக்கறையுடன் உழைத்தால் அது ஒன்றே போதும்—என்ற சிங்கள மக்களின் சிங்கள அரசின் மனப்படிமத்தை இது துல்லியமாகவும், மிகத் துலாம்பரமாகவும் எடுத்துச் சொல்கிறது.

இப்படிப் பிரித்துக்காட்டும் சிங்களவர்களிடம் இருந்து, தமிழர்கள் விலகி, பிரிந்து வாழ நினைப்பதில் தவறு என்ன? தங்களுக்கென்று ஒரு தனித் தாயகத்தை நிறுவி, முன்னர் அவ்வாறு இருந்ததை நிலைநிறுத்தி, தங்களுக்கு என ஓர் ஆட்சியை ஏற்படுத்தி, தங்களைத் தாமே ஆளும் உரிமையை, தமது இறைமையை அனுபவிக்க நினைப்பதில் தப்புத்தான் என்ன? தமிழர்கள் தமது மண் உரிமையை, ஆட்சி உரிமையை, அடிப்படை உரிமையை, சனநாயக உரிமையை நிலைநாட்டுவதையே இலட்சியமாகக் கொண்டு, அவற்றுக்காகப் போராடத் துணிந்ததில் தப்பிதம் ஏது?

இப்போதுள்ள சூழ்நிலையில், தமிழர்களுக்கு எந்தத் தேர்தலைப் பற்றியும் சிந்திக்க நேரமில்லை. முதலில் அவர்களது நாளாந்த வாழ்க்கையில் அமைதியும், பாதுகாப்பும், நிம்மதியும் தேவை. அவற்றை உருவாக்காமல் அதற்கான முயற்சியைத் தானும் செய்யாமல் வடக்கு, கிழக்கில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம் என்றோ மக்கள் அதில் கலந்துகொண்டு வாக்களிப்பர் என்றோ எதிர்பார்ப்பது வெறும் முட்டாள்தனம் அன்றி வேறில்லை.

இலங்கையில் சனநாயகம் வாழ்கிறது என்று உலகத்தை ஏமாற்றும் செயல் அது. தமிழ் மக்கள் எப்போதும் நெருக்கடியான, அமைதியற்ற சூழ்நிலையிலேயே வாழட்டும் என்று மெதுவாகத் தமிழர் பிரச்சினையைக் கைகழுவி விடும் ஓர் அரசியல் தந்திரமாகவும் இது அமையும்.

# பசுபிக் கடலில் சோவியத் யூனியன் ஆதிக்கம்

## ஜப்பான் அரசு குற்றச்சாட்டு

டோக்கியோ, ஆக 23

பசுபிக் கடலில் சோவியத் யூனியன் தனது கடற்படைப் பலத்தை அதிகரித்து வருவதாக ஜப்பான் குற்றஞ் சாட்டியிருக்கிறது.

இதனால் தனது நாட்டுக்கு நேரடியான ஆபத்து ஏற்பட்டிருப்பதாக ஜப்பான் நேற்று அறிவித்தது.

சோவியத் யூனியனின் நடவடிக்கை பற்றி ஜப்பான் அரசு ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையிலேயே இத்தகவல்கள் வெளியிடப்பட்டன.

இதன் காரணமாகத் தனது ஆயுதப்படைகளைப் பலப் படுத்த வேண்டியிருப்பதாகவும் புதிய நவீன ஆயுதங்கள் படையினருக்கு வழங்கப்படுவதாகவும் ஜப்பான் அரசு அறிவித்து உள்ளது.

ஆயுத பரிரணம், ஆப்களில் இருந்து படை விலக்கு என்று சொல்லிக் கொண்டு சோவியத் யூனியன் பசுபிக் கடல் பிராந்தியத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயல்வதாக ஜப்பான் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

## போலந்தில் வேலை நிறுத்தம்

வார்லோ, ஆக. 23

வேலைநிறுத்தத் தினால் பாதிக்கப்பட்டுள்ள தொழில் நிலையங்களைப் பராமரிக்கும்பொறுப்பை போலந்து அரசு பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைத்து இருக்கிறது.

போலந்து தொழிற்சங்க சம்மேளனம்நடத்திவரும் வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் ஒரு நடவடிக்கையாகவே இது எடுக்கப்பட்டுள்ளது.

மூன்று முக்கிய நகரங்களில் ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப் பட்டுள்ளது. (எ)

## ஈரான்-ஈராக் நேரடிப் பேச்சு; ஜெனிவாவில் வியாழன் ஆரம்பம்

ஜெனீவா, ஆக 23

ஐ. நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் ஜெனிவா சென்றடைந்தார்.

வளைகுடா யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து ஈரான், ஈராக் ஆகிய நாடுகள் எதிர்வரும் வியாழன நேரடிப் பேச்சுக்களை ஜெனிவாவில் ஆரம்பிக்கவுள்ளன.

இதற்கு முன்னோடியாக இருதரப்பினரையும் தனித்தனியாக பொதுச் செயலாளர் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார்.

ஜெனிவாவில் செய்தியாளர் மத்தியில் திரு. குயிலர் பேசினார்.

வளைகுடாப் பிரச்சினைகளுக்கு சிலமாதங்களில் தீர்வு கண்டுவிட முடியாது என்று திரு. குயிலர் சொன்னார். (எ)

## அரபுப் பிரதேசத்தில் அதிகரிக்கும் மோதல்

ஜெருசலம், ஆக 23

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் பெரிய அளவில் வன்செயல்கள் இடம் பெற்றிருப்பதாக இஸ்ரவேல் வானொலி அறிவித்தது.

வன்செயல்களில் 18 பலஸ்தீனியர் காயம் அடைந்தனர்.

கிளர்ச்சியில் ஈடுபட்ட பலஸ்தீனியர்கள் பலர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் தாக்கியதால் ஏற்பட்ட எரிகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, நபுலஸ் நகரம், அதைச்சுற்றியுள்ள பலஸ்தீன அகதி முகாம்கள் உள்ள பிரதேசம் ஆகியவற்றில் ஊரடங்குச் சட்டத்தை இஸ்ரவேல் அரசு பிறப்பித்துள்ளது. (எ)

## எல்சல்வடோர் தேர்தல்

எல்சல்வடோர், ஆக. 23

எல்சல்வடோர் ஜனாதிபதித்தேர்தலில் இடதுசாரி கெரில்லாக்கள் முன்னணி போட்டியிடவிருக்கின்றது.

எட்டு ஆண்டுகளில் முதல் தடவையாக இம்முறைதான் இடதுசாரிகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வந்திருக்கின்றனர். (எ)

## ராஜீவ் விஜயம்

பாட்னா, ஆக. 23

பூமியதிர்ச்சியினால் பீஹாரில் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதமர் ராஜீவ்காந்தி நேற்று நேரில்பார்வையிட்டார். (எ)

வெளி உலகில்

## பாகிஸ்தானில் மீண்டும் ராணுவ ஆட்சியா? இல்லை எனப் பதில் அதிபர் மறுப்பு

இஸ்லாமபாத், ஆக.23

பாகிஸ்தான் ஆட்சியை மீண்டும் இராணுவம் பொறுப்பு ஏற்க மாட்டாது

பதில் அரசுத் தலைவர் குலாம் இஷாக்கான் நேற்று அறிவித்தார்.

பாகிஸ்தானில் மீண்டும் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்படும். ஆட்சிப் பொறுப்பை இராணுவம் நடத்தும் என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன—

இதைப் பாகிஸ்தான் பதில் அதிபர் மறுத்தார்.

பாகிஸ்தான் அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடந்தது.

மறைந்த அதிபர் ஸியாவின் கொள்கைப் படியே ஆட்சியை நடத்துவது என்று அமைச்சரவை தீர்மானித்தது.

## ஐ. நா. வேண்டுகோள்

கார்ட்டூம், ஆக.23

சூடானில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பாதிக்கப்பட்ட லட்சக் கணக்கான மக்களுக்கு அவசர உதவிகளை வழங்கும்படி உலகநாடுகளுக்கு ஐ. நா. பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (எ)

## பர்மாவில் தொடரும் ஆர்ப்பாட்டங்கள்

பர்மாவின் புதிய தலைவர் மொங் மொங்குக்கு எதிராக லட்சக்கணக்கான மக்கள் ரங்கூனில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தலைநகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால் மட்டும் சுமார் ஒரு லட்சம் மக்கள் பேரணி நடத்தினர்.

அரசு மருத்துவ மனைக்கு முன்னால் பல்லாயிரக்கணக்கானோர் குழுமி நின்று அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். (எ)

## புருண்டியில் கலவரம்

புருண்டி நாட்டில் பழங்குடி மக்களுக்கு இடையே பயங்கர மோதல் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக சுமார் 30 ஆயிரம் புருண்டி மக்கள் லுவாண்டா நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்திருக்கின்றனர் என்று தெரிய வருகின்றது. (எ)

## உடன்பாடு கைச்சாத்து!

கல்கத்தா, ஆக. 23

கூர்க்காலந்து பிரச்சினைக்குத் தீர்வுகாண உருவாக்கப்பட்ட மலைப் பிரதேச வளர்ச்சிக் கவுன்ஸில் உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

# ஹோம்பினன்ஸ் நிறுவன வைப்பாளர்களுக்கு சாதகமான முடிவை அரசாங்கம் எடுக்கும்

### ஆலோசனைக் கூட்டத்தில் சங்க பொருளாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 24

ஹோம் பினன்ஸ் நிறுவனம் முறிந்துபோக அரசாங்கம் விட்டு விடாது. இந்த விடயத்தில் அரசாங்கம் வைப்பாளர்களுக்குச் சாதகமாக — நல்ல — முடிவினை எடுக்காவிட்டால் அரசாங்கம் அதன் இரண்டாவது பணச்சந்தையாக விளங்கும் நிதி நிறுவனங்களின் ஆதரவையும் இழந்து விடும். அத்துடன் அது அரசுக்கு பேரிழப்பும் ஆகிவிடும்.

ஆகவே மத்திய வங்கி மூலம் எப்படியும் நல்ல முடிவினை அரசு பெற்றுத்தரும்.

— இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார், ஹோம் பினன்ஸ் - யாழ்ப்பாணம் வைப்பாளர் சங்கத்தின் பொருளாளர் திரு. ரி. சோமசுந்தரம்.

யாழ்ப்பாணம் வைப்பாளர் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த வாரம் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே திரு. சோமசுந்தரம் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

கூட்டத்துக்கு திரு. சிவா முத்துலிங்கம் தலைமை வகித்தார்.

யாழ்ப்பாணம் முன்னாள் நகர மேயர், சட்டத்தரணி திரு. நாகராசா அங்கு கருத்துத் தெரிவிக்கையில் —

மத்திய வங்கி தனது கடமையை சரிவர செய்யத்தவறியமையால் தான் இன்று இந்தநிலை ஏற்பட்டது. எமது சங்கத்தின் சில நடவடிக்கைகளை அடுத்தே மத்திய வங்கி சில முடிவுகளை மேற்கொண்டிருக்கிறது.

மாவட்ட நீதிமன்ற வழக்கு எம்மால் வாபஸ் பெறப்பட்டதைத் தொடர்ந்து மத்திய வங்கி நிறுவனத்தை ஓராண்டுக்குப் பொறுப்பேற்று செயற்படுத்த முன் வந்திருக்கிறது — என்றார்.

சங்கத் தலைவர் திரு. சிவா முத்துலிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

ஒரு வருடகால எல்லையில் மத்திய வங்கி எடுக்கும் நடவடிக்கைகளைப் பார்த்தே எமது சங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகளை — முடிவுகளை — செய்ய வேண்டும்.

நிதி நிறுவனம் ஒரு சமயம் பொதுக் கம்பனியாக மாற்றப்பட்டால் வைப்பாளர்களாகிய நாம் என்ன பொறுப்புக்களை ஏற்கலாம் என்பதை செப்டெம்பரில் கொழும்பில் நடைபெறும் கூட்டத்தின் பின்னரே முடிவு செய்ய முடியும் — என்றார்.

கூட்டத்தின் முடிவில் ஹோம் பினன்ஸ் நிறுவனம் பொதுக் கம்பனி ஒன்றாக மாற்றப்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் —

அவ்வேளையில் பணமாக ஒரு குறிப்பிட்ட வீதத்தையும் (ரூபா 3 ஆயிரம்), வைப்புப் பணத்திலிருந்து மற்றொரு வீதத்தையும் பங்குகளாகக் கொள்வனவு செய்ய வேண்டும் என்ற தீர்மானம் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(உ-90-69)

## கிளிநொச்சி-வட்டக்கச்சி பாதைசீர்கெட்டநிலையில்

யாழ்ப்பாணம், ஆக 24

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி ஊடாக இராமநாதபுரம் செல்லும் பாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

வீதியின் நடுவே பெரிய பள்ளங்கள் காணப்படுகின்றன. இதனால் இந்த வீதியூடான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இதுகுறித்து பெருந்தெருக்கள் திணைக்களத்திற்கும், அரச அதிபருக்கும் பல மகஜர்களை அனுப்பியும் இதுவரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை என இந்தப் பகுதி வாழ் விவசாயி ஒருவர் கவலையை வெளியிட்டார்.

(உ-9)

## யாழ் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 24

யாழ். பல்கலைக்கழகத்திற்கு 1988- 1989 ஆம் கல்வி ஆண்டிற்கானபுதிய மாணவர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன,

கலைப்பீட மாணவர்கள் இந்தமாதம் 29 ஆம் திகதியும்-

வணிக, முகாமைத்துவ மாணவர்கள் 30 ஆம் திகதியும்-

விஞ்ஞான மாணவர்கள் 31 ஆம் திகதியும்-

மருத்துவ மாணவர்கள் செப்டம்பர் மாதம் முதலாம் திகதியும் நேரடியாக காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரத்தில் பல்கலைக்கழகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

கலைப்பீட மாணவர்கள் பதிவுக்கட்டணமாக 60 ரூபாவும் புவியியலை ஒரு பாடமாக எடுக்கும்-கலைப்பீட மாணவர்களும், விஞ்ஞான, மருத்துவ பீடமாணவர்களும், கட்டணமாக 110 ரூபாவும் செலுத்தவேண்டும்.

பதிவு செய்வதற்காக வரும் புதிய மாணவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிப் பத்திரம், பிறப்புச் சான்றிதழ், பாடசாலைவிடுகைப்பத்திரம் பாஸ்போட் அளவிலான ஏழு போட்டோ பிரதிகள் ஆகிய ஆவணங்களைத் தம்முடன் கொண்டுவரும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

(உ- 5)

சமய சந்நிதிகளில்

## கைதடியில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக 24

கைதடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி பிள்ளையார் கோவிலின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 28 ஆம் திகதி நடைபெறும்.

அன்றைய தினம் காலையில் 7-30 மணி தொடக்கம் 9 00 மணி வரையுள்ள சுப நேரத்தில் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கும், ஸ்ரீ பருவதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமிக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறும். (உ)

## ஐயனார்கோவில் பொங்கல்

யாழ்ப்பாணம், ஆக 24

நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் கோவிலின் வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது.

கடந்தகால அசம்பாவிதங்களினால் மூன்றுவருடங்களாக இந்த பொங்கல் விழா நடைபெறவில்லை

(உ-9)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### நல்லைச் செழும்பதி சேர்மினே !

குன்றி னுடுங் குமர னமரரை
அன்ற ளித்தவெம் மண்ண லருள்பெற
ஒன்று சிந்தைய ராகி யுவப்பொடு
சென்று நல்லைச் செழும்பதி சேர்மினே!

வேங்கை மாதரு வாகிய வேலவன்
பூங்க ழற்பதம் போற்றி யருள்பெறப்
பாங்கலைத் தெழு பன் மலர்த் தேறலும்
தேங்கு நல்லைச் செழும்பதி சேர்மினே!

சூர ரங்கெட வேற்படை தூண்டிய
வீர னையன் விமல னருள் பெற
கார லாய சடுமலர்ச் சோலைகள்
சேரு நல்லைச் செழும்பதி சேர்மினே!

சீரி தாகிய செந்தமிழ் தந்தருள்
பூர ணன்னடி போற்றி யருள்பெற
பாரி லேயுறு பல்வகை யல்லலுந்
தீர நல்லைச் செழும்பதி சேர்மினே!

பேறு பெற்ற பிணிமுக வூர்தியில்
ஏறு சேவக னீயு மருள்பெற
கூறி லாதுநின் றுடு மனமினித்
தேற நல்லைச் செழும்பதி சேர்மினே!

பூமி சைப்பொலி புண்ணியர் போற்றிய
நாம வேற்கர நாதனருள் பெறச்
சாமி தாசன் றமிழிசை பாடியே
சேம நல்லைச் செழும்பதி சேர்மினே!

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர்
(நன்றி: இலங்கையின் புராதன சைவாலயங்கள்)

## வீதியின் அவல நிலை

கோப்பாய் ஆக 24

கைதடி வடக்குக்குச் செல்லும் வீதி மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது.

பெரும்பாலான விளைநிலங்கள் இப்பகுதியிலே தான் காணப்படுகின்றன.

இதனால் விவசாயிகளும் பொது மக்களும் தாம் பெரிதும் பாதிப்புக்குஉள்ளாவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

(ஒ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

24 - 08 - 1988 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## 20 இந்திய......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

அடர்ந்த காட்டுப் பகுதியில் கடுமையான சண்டை நடப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை—

இந்திய இராணுவ நடவடிக்கையின் போது 21 தமிழ்ப் போராளிகளும் 23 இந்திய ஜவான்களும் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

வவுனியாவுக்கு வடக்கே நெடுகுளத்தில் நடந்த குண்டுவெடிப்பில் 2 இந்திய ஜவான்கள் காயமடைந்தனர் என்றும் வன்னேரிக்குளத்துக்கு அருகே நடந்த இன்னொரு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மேலும் ஐந்து இந்திய ஜவான்கள் காயமடைந்தனர் என்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அறிவித்தது.

(அ-எ)

## யாழ்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் போக்குவரத்து அமைச்சு ஆலோசித்துவருகிறது.

இதன் அடிப்படையில் தற்போது கொழும்பு—யாழ் பஸ் சேவை நடத்த வழங்கப்பட்டுள்ள வீதி அனுமதிப் பத்திரங்கள் ரத்துச் செய்யப்படும் எனச் சொல்லப்பட்டது.

(ஓ-3)

UNITED NATIONS OFFICER IS LOOKING FOR A HOUSE (3 BEDROOMS/PREFERABLY FURNISHED) IN NALLUR.

Please contact :
**UNHCR Office**
223, Temple Road,
Nallur.
Tel. 373 (5973)

கொம்பியூட்டர் பயிற்சி
Basic & Advanced Basic Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம்;
26-8-88 Weekend Batch / Weekday Batch
காலம்: 2 மாதம் ஆரம்ப கட்டணம்; Rs. 400/-
IDP
342, K.K.S Road, (சிவன்கோவிலடி) யாழ்ப்பாணம். (12. 30 p.m)
K.K.S, Road, (துர்க்கையம்மன்கோவிலடி) தெல்லிப்பளை. (3. 30 p. m)
(C 6330)

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி கலாமதி கதிர்காமராஜா (கலா)**

மலர்வு: 24- 10- 1963
உதிர்வு: 24- 8- 1987

அன்பின் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஆயினும்!!
ஆயிரம் யுகம் ஆயினும்!!!
என் நெஞ்சத்தின் நினைவலைகள்
அத்தனையும் பசுந் தளிர்கள்
உன் நினைவு வரும் போது
தெரிவதெல்லாம்
அழகிய வதனமும்
அன்பு மொழிகளுமே
அதை எனக்கு தருவதற்கு
இனி யாருண்டு இப் பாரினிலே
என நினைத்து கண்ணீர்ப் பூக்களை
செலுத்தி அஞ்சலி செய்து
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

உன் அன்புக் கணவர்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

மாமூலை,
முள்ளியவளை. (5102))

## சாவகச்சேரியில் நேற்று சந்தை கூடியது

### உட்பக்கக் கடைகளும் திறப்பு

சாவகச்சேரி, ஆக 24

சாவகச்சேரியில் நேற்று செவ்வாய்க்கிழமை வழமை போல சந்தை கூடியது. மூடப்பட்டிருந்த சகல வாசல்களும் திறந்து விடப்பட்டன. திறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த உட்பக்கக் கடைகளும் திறக்கப்பட்டன.

## மன்ன.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்திற்கான ரயில் சேவையும் நடைபெறலாம் என அமைதிப் படை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

மன்னகுளம் பகுதியில் ரயில் பாதை கடந்த 13 ஆம் திகதி இடம் பெற்ற குண்டுவெடிப்பின்போது சேதமாக்கப்பட்டது என்பது தெரிந்ததே. (ஓ-94

## 12 பேர் தெரிவு

பலாலி, ஆக. 24

யாழ். கல்வி மாவட்டத்திற்கென வர்த்தக பாடத்திட்டத்திற்கான சேவைக்கால கல்வி ஆலோசகர்களைத்தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சையில் 12 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீசை எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். (ஓ-119)

## தமிழர் நலனில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது, 72 மணி நேர யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்கவும், நிபந்தனையற்ற விதத்தில் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என்றும் பிரசைகள் குழுவினர் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைதிப்படைத் தளபதி —

ஏற்கனவே ஒருமுறை இவ்வாறான யுத்த நிறுத்தம் ஒன்று அறிவிக்கப்பட்டதில் போராளிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே மீண்டும் ஒரு முறை யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டால், அதனை ஏற்றுக்கொண்டு போராளிகள் பேச்சுவார்த்தைக்கு வர பொதுமக்கள் சார்பில் உத்தரவாதம் வழங்க முடியுமா? எனக் கேட்டாராம்

பிரசைகள் குழுவினர் அதற்குப் பதிலளித்த போதே—

இந்திய அரசு, இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை கொண்டு, பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென மானசீகமாக விரும்பினுல், அதற்கு அடையாளமாக முதலில் தனது முழுச்செல்வாக்கையும் இலங்கை மீது பிரயோகித்துவெலிஓயா, மற்றும் கிழக்குப் பகுதியில் நடக்கும் சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.—

அவ்வாறு நிரூபித்துக் காட்டுவதன் மூலம் தமிழ் மக்களின் நலனிலும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அமுல் செய்வதிலும் இந்தியாவுக்கு அக்கறை உண்டு என தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும். அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் எந்த யுத்த நிறுத்தத்தையோ பேச்சுவார்த்தையோ தான் தமிழ் மக்களும், போராளிகளும் ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாக முடியும்-

அதனை விடுத்து. வடக்கு, கிழக்கு வாழ் பொது மக்களையும், பொது ஸ்தாபனங்களையும் நோக்கி போராளிகளைப் பேச்சுக்கு அழைத்து வாருங்கள், ஆயுதத்தை கைவிடச்சொல்லுங்கள் என்று கூறுவதில் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை- என்று வலியுறுத்தப்பட்டதாகக் குழு வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (அ-9)

## நிவாரணம் . . . .

(1ஆம்பக்கத்தொடர்ச்சி

மூலம் தெரிவித்துள்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1987 ஆம்ஆண்டு இடம் பெற்ற நடவடிக்கைகளின்போது தமது இருப்பிடங்களைவிட்டு இடம் பெயர்ந்தவர்கள், இடம் பெயர்ந்த காலத்தில் தமது வீடு அல்லது உடைமைகள் சேதமுற்று அல்லது அழிக்கப்பட்டிருந்தால் அவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையைக்கொண்டு நடத்துவதற்கு ஏதுவாக நிவாரண உதவி வழங்கப்பட உள்ளது.

அத்தகையவர்கள் தமது பிரிவு கிராம சேவை அலுவலரிடம் சென்று தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு மீண்டும் கேட்கப்படுகிறது.

சொந்த இடங்களில் இருந்து வெளியேறியவர்கள் திரும்பவும் அவ்விடத்தில் குடியேற முடியாத காரணத்தினால் வேறு இடங்களில் இருந்தால் அவர்கள் தமது சொந்த இடத்துக் கிராமசேவை அலுவலரிடமே பதிவு செய்து கொள்ளவேண்டும்.

கிராமசேவை அலுவலர்களும் குறிப்பிட்ட திகதியை அனுசரித்து பதிவுகளை ஏற்றுக்கொள்ளுமாறும் உரிய காலத்திற்குள் பதிவுப் பட்டியல்களைத் தமது உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்குமாறும் கேட்கப்படுகின்றனர் என்றுகூறப்பட்டுள்ளது.

## காரைநகரில்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. பல பொதுமக்கள் தாக்குதலுக்கு ஆளாகினர்.

தேடுதலின்போது பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் சிலர் விடுவிக்கப்படவில்லை.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை விடுவிக்கக் கோரி பெற்றோர்கள் கூட்டம் கூட்டமாக அமைதிப்படை முகாம் முன்பாக பெருந்திரளாக நின்றதைக் காண முடிந்தது. (ஓ-73)

## நாளைய ஹர்த்தாலுக்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பு முகாம்களிலும் தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டு சித்திர வதைக்குள்ளாக்கப்படுவதைக் கண்டித்தும்—

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தை நிறுத்தி சமாதான முறையில் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு தமிழருக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிடைக்க வேண்டுமென்பதே வலியுறுத்தியும், நாளை வியாழக்கிழமை நடைபெற இருக்கும் பூரண ஹர்த்தாலுக்கு சகல தமிழ் மக்களும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு நல்குமாறு யாழ் அன்னையர் முன்னணியினர் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றனர்— என்று கூறப்பட்டுள்ளது. (ஒ)

## யாருடைய பணம்?

யாழ்ப்பாணம் செயலக வாசலில் கடந்த திங்கட்கிழமை 22 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்ட பணத்தொகை, அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

உரியவர் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கத்தை, செயலகத்தில், அவரது அலுவலகத்தில் சந்தித்து, உரிய அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (அ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை**

(காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் **வேலுப்பிள்ளையின் அன்புப் பாரியார்**)

(சீரணி நாகம்மாள் கோவிலடி, சண்டிலிப்பாய்)

**தோற்றம்: 1 – 7 - 1902**
**மறைவு: 25 - 7 – 1988**
**திதி: 24 – 8 - 1988**

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய் எம்மையெல்லாம் வளர்த்து வையகத்திலே நற்பிரசைகளாக உலாவவிட்ட அன்புத் தெய்வமே எம் வாழ்வில் ஒளிவிளக்காய் ஒளிதந்து இறைவனடி சேர்ந்துவிட்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:

**அன்புமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

P. S. சேவிஸ் ஸ்ரேசன்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [6001]

## க. கோபாலகிருஷ்ணன்

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைச் சேர்ந்த க. கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஜேர்மனியில் காலமாகி விட்டார். காலஞ்சென்ற கனகசபை நாகம்மா அவர்களின் மகனும் காலஞ்சென்ற சோமசேகரம்பிள்ளை (ஆசிரியர்) செல்லம்மா அவர்களின் மருமகனும், யோகாம்பிகையின் அன்புக்கணவரும் கேதாரரூபன், தயாளரூபன், இன்பரூபன், ஞானரூபன் ஆகியோரின் தந்தையும் சிவரத்தினம் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் சச்சிதானந்தன் உலகேஸ்வரி சுந்தாரம்பாள் ஆகியோரின் சகோதரனும், நாகரத்தினம் S. P. M இறுப்பிட்டி, காலஞ்சென்ற இராசமணி, செல்வநாயகம் (பிள்ளையார் அன் கோ சாவகச்சேரி) குலசிங்கம் (ஆசிரியர் கிளி/புனித பற்றிமா வித்தியாலயம், உருத்திரபுரம்) எதிர்வீரசிங்கம் (ரூபன் பான்சிபிளேஸ் யாழ்ப்பாணம்) இந்திராணி, மன்மதராசன் (ஸ்ரீ உமாபென்சிப்பலஸ் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துணருமாவார். ஈமைக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:- சோ. நாகரத்தினம்

S. P. M. புங்குடுதீவு -6 (5896)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி செல்வபாரதி

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வி செல்வபாரதி காலமானர். இவர் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவியும், செல்லையா காலஞ்சென்ற பத்மராணி ஆகியோரின் அன்பு மகளும், செல்வாஸ்கரன், பத்மராஜன், பத்மரூபன், கலையரசி ஆகியோரின் சகோதரியும், இளையதம்பி நாகலிங்கம், காலஞ்சென்ற செல்லம்மா தம்பதியினரின் அருமைப்பேத்தியும், காலஞ்சென்றவர்களான முருகேசு, இளையபிள்ளை தம்பதியினரின் அன்புப்பேத்தியும், தவராணி, நவராணி, விஜயராணி ஆகியோரின் அன்புப் பெருமகளும், தணசிங்கநாதன் (R K.M. கொழும்பு), தில்லைநாதன், கணநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமகளுமாவார்.

அன்னரின் பூதவுடல் 23ஆம் திகதியன்று செவ்வாய்க்கிழமை (நேற்று) பகல் இரண்டு மணியளவில் மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தில்லைநாதன்**

( 5964 )

### அதிரியான் சுவக்கின்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சுவக்கின் 22. 08. 88இல் காலமானர். இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பராணி, ரமேஸ், இந்திராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அதிரியான், காலஞ்சென்ற அந்தோனியம்மாவின் அன்புமகனும், மாக்கிறேற் அவர்களின் சகோதரனும் முத்தையாவின் சகலனும் ஆவார். அன்னரின் பூதவுடல் 613/3, K. K. S. றோட் அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக 24. 8. 88 இன்று நாவாந்துறைப் புனித நீக்கிலார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**M. S. R. முத்தையா**

613/3, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (5968)

### திருமதி தையல்நாயகம் பாலசுப்பிரமணியம்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி தையல்நாயகம் பாலசுப்பிரமணியம் 22- 8- 88இல் காலமாகிவிட்டார். அன்னர் பாலசுப்பிரமணியத்தின் (பிரதிப் பிரதம கணக்காளர், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி) அன்பு மனைவியும், யோகராணி, காலஞ்சென்ற புஸ்பராணி, ஸ்ரீஸ்கந்தராசா (கல்விக் கந்தோர், திருகோணமலை), ஸ்ரீவிக்கினராசா (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகராசா (இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகாப் பிரதிப் பணிப்பாளர்), நடராசா குமாரசாமி (பிரதி ஆணையாளர் வருமானவரி இலாகா, பதுளை), பத்மதேவி, கமலாதேவி, ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்ஷன், சசிகலா, தனுஷன், சதீஷன், சயந்தன், சிவாணி, புஸ்பா, அகிலா ஆகியோரின் பேத்தியாரும், சிவனுஜன், துவாரகா ஆகியோரின் பாட்டியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**சி. பாலசுப்பிரமணியம்**

தபாற்கந்தோர் வீடு,
கோண்டாவில் கிழக்கு. (5900)

### மனுவல்பிள்ளை றிச்சேட் லூயிஸ்

(Retired Store Keeper – Food Control Dept.)

மனுவல்பிள்ளை றிச்சேட் லூயிஸ் காலமானர். இவர் பூமணியின் (பூவா) அன்புக் கணவரும், சாந்தினி, பத்மினியின் அருமைத் தந்தையும், றெபின், பொனிபஸின் அன்பு மாமனாரும், லக்ஸ்மன், தருஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிறில், எலிசியின் அருமைச் சகோதரரும் ஆவார். அன்னரின் பூதவுடல் வியாழக்கிழமை 25- 8- 88 காலை 8. 00 மணியளவில் அன்னரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்

தகவல்:
**றெபின் பொனிபஸ்**

2 19, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (59 74)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் [illegible] நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 24 08 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Wednesday 24th August 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org